## கிழக்கு மகாண சபை - 2018

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிழக்கு மாகாண சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி வெளியிடப்பட்டதுடன், தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி வெளியிடப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10(1) உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிழக்கு மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் மாகாண திறைசேரி உள்ளடங்களான அந்தந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கிழக்கு மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண சபைக்கு எதிராக மூன்றாம் தரப்பினர்களினால் ஆரம்பிக்கப்பட்ட 72 நீதிமன்ற வழங்குகள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்புக்களை மாகாண சபை வெளிப்படுத்தியிருக்க வில்லை. | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தற்போது, காசு அடிப்படையிலான கணக்கீட்டு முறைமையின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களை மாகாண சபை தயாரிக்கின்றது. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்புக்களை வெளிப்படுத்துவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம். |
| (ஆ) | 2004 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதி யொன்றுக்காக புகையிரதத் திணைக்களத்திற்கு 03 வலயக் கல்வி அலுவலகத்தினால் புகையிரத ஆணைச்சீட்டுக்கள் தொடர்பில் செலுத்த வேண்டிய ரூபா 6,679,889 கூட்டுத்தொகையான தொகைகள் நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | நிலுவையாகவுள்ள மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது நிதிக்கூற்றுக்களில் அதனை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | புகையிரத ஆணைச்சீட்டுக்களின் நிலுவைகள் எதிர்காலத்தில் முழுமையாக தீர்ப்பனவு செய்யப்படும். |

## 2. வருமான முகாமைத்துவம்

### 2.1 மாகாண வருமான ஆணையாளரை நியமிக்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2008 இன் 01 ஆம் இலக்க நிதி நியதிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம், மாகாண வருமான ஆணையாளர் நியமிக்கப்படல் வேண்டும். 2011 திசெம்பர் 18 இலிருந்து மாகாண வருமான ஆணையாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும் கிழக்கு மாகாணத்தின் மாகாண வருமானத் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்பு மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் 3.2 ஆம் பிரிவின் பிரகாரம் இந்தப் பதவியை நிரப்புவதற்கு மாகாண சபை நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. 07 வருடங்களாக மாகாண வருமான ஆணையாளரொருவரை நியமிக்காமையின் விளைவொன்றாக, நிதி நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு கிழக்கு மாகாண, மாகாண வருமானத்தின் சேகரிப்பு மற்றும் நிர்வாகத்துடன் தொடர்புடைய செயற்பாடுகள் பாரியதொரு பரப்புக்கு தாக்கமளித்திருந்தது. | நிதி நியதிச் சட்டத்தின் பிரகாரம் மாகாண வருமான ஆணையாளர் பதவிளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பொருத்தமான மாகாண வருமான ஆணையாளரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2 முத்திரைத் தீர்வை மற்றும் நீதிமன்ற அபராதங்கள் சேகரிப்பு தொடர்பான செயல்முன்னேற்றம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கிழக்கு மாகாணத்திலுள்ள காணி பதிவகத்தில் காணப்படும் காணிகளை பதிவு செய்து முத்திரைத் தீர்வையை சேகரிப்பது தொடர்பில் மாகாண வருமானத் திணைக்களத்தினால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது நடாத்தப்பட்ட நடமாடும் சேவையின் பிரகாரம், முத்திரை தீர்வையாக குறைந்த தொகையை செலுத்தும் பொருட்டு 794 காணி உரிமையாளர்கள் அவர்களின் | மாகாண வருமான ஆணையாளரை நியமிப்பதற்கு மற்றும் மேலதிக முத்திரை தீர்வையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மாகாண வருமான ஆணையாளர் நியமிக்கப்பட்டதும் நிலுவையாகவுள்ள மேலதிக முத்திரைத் தீர்வையை நீதிமன்றங்களினூடாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். |

| | | | |
|---|---|---|---|
| | காணிகளுக்கான பெறுமதியை குறைத்து வெளியிட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. ஆகையினால், அந்த குறைப் பெறுமதியிட்ட ஆதனங்களுக்காக ரூபா 14,190,769 கூட்டுத்தொகையான மேலதிக முத்திரைத் தீர்வை விதிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மாகாண வருமானத் திணைக்களம் காணி உரிமையாளர்களிடமிருந்து அவ்வாறு விதிக்கப்பட்ட ரூபா 4,766,793 நிலுவையாகவுள்ள மேலதிக முத்திரை தீர்வையை அறவிடுவதற்கு 2018 திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | 2012 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியின் போது கிழக்கு மாகாணத்தில் ஏழாயிரத்து ஆறுநூற்று பதினாறு (7,616) உறுதிப்பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டதுடன் காணிகளின் பெறுமதியை குறைத்துப் பெறுமதியிடப்பட்டமை காரணமாக சரிபார்த்தல் மற்றும் மேலதிக முத்திரை தீர்வையை விதிக்கும் பொருட்டு மாகாண வருமானத் திணைக்களத்தினால் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உறுதிப் பத்திரங்கள் தொடர்பான மதிப்பீட்டு வேலைகளினை துரிதப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | திணைக்களம் எதிர்கொள்ளும் பிரதான தடையாக மனித வளத்தின் பற்றாக்குறை காணப் படுகின்றதுடன் குறைப் பெறுமதியிட்ட உறுதிப் பத்திரங்களினை மதிப்பிடுவதற்கு அம்பாறை மற்றும் மட்டக்களப்பில் காணப்படும் பிராந்திய அலுவலகங்கள் 2013 இலிருந்து மூடப்பட்டுக் காணப்படுகின்றன. |

**2.3 வருமான நிலுவைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 208,313,183 கூட்டுத்தொகையான 09 பிரதேச செயலகங்களுடன் தொடர்புபட்ட அரச காணிகளுக்கான குத்தகை வருமானம், 1991 ஆம் ஆண்டிலிருந்து நிலுவைகளாக தொடர்ந்தும் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், 2019 ஏப்ரல் | மேலும் தாமதமின்றி குத்தகை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 1992/58 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், அனைத்து குத்தகை அறவிடுகைகளும் பிரதேச செயலாளர்க்கு அதிகாரத்துடன் கடமைப்பகிர்வு செய்யப்பட்டிருக்கின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | 30 வரையிலும் அந்த நிலுவையாகவுள்ள வருமானத்தை அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | ஆனால், இந்தப் பிரதேசங்களில் யுத்த சூழ்நிலைகள் காரணமாக, அந்த நடைமுறைகள் தாமதமடைந்து காணப்பட்டது. |
| (ஆ) | மாகாண வருமானத் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டு 10 வருடங்களாகியிருந்த போதிலும், கிழக்கு மாகாணத்தில் செயற்படுகின்ற அடகுபிடிக்கும் நிலையங்களை பதிவு செய்தல் மற்றும் இது தொடர்பில் வருடாந்த அனுமதிப்பத்திரமொன்றை வழங்கும் பொருட்டு நியதிச்சட்டமொன்று இயற்றப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவொன்றாக, மாகாண சபைக்கு கருத்திற் கொள்ளத்தக்க வருமானத் தொகையொன்று இழக்கப்பட்டிருந்தது. | அடகு பிடிக்கும் நிலையங்களுக்கான மாகாண நியதிச் சட்டத்தை இயற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அடகு பிடிக்கும் தரகர்களுக்கான நியதிச் சட்டமொன்று மூன்று மொழிகளிலும் வரையப் பட்டிருக்கின்றதுடன் நியதிச்சட்ட சபை ஆரம்பித்த பின்னர் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் செயற்பாடுகளை அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 2,434,433,298 மிகையுடன் ஒப்பிடும் போது ரூபா 1,708,421,018 மிகையொன்றை விளைவித்திருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 726,012,280 பற்றாக்குறையொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போது சம்பளங்கள் மற்றும் கூலிகள் ரூபா 1,664,374,790 இனால் அதிகரித்தமை பற்றாக்குறைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. நியதிச்சட்ட கணக்குகள்

### 4.1 கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையானது பஸ் தரிப்பிடங்களிற்கான தனியார் | மேலும் தாமதமின்றி புள்ளி விற்பனை | பல ஆண்டுகளாக மென்பொருளின் பல்வேறுபட்ட |

| | | |
|---|---|---|
| பஸ்களின் வருகை மற்றும் வெளிச் செல்லல்களை பதிவு செய்வதற்காக ரூபா 1,142,000 கிரயத்தில் 2015 யூன் 08 இல் பொது பாக்கெட் வானொலி சேவை (General Packet Radio Service) (GPRS) முறைமை மற்றும் 2000 ரிக்கற் சுருள்கள் என்பவற்றுடன் இணைக்கப்பட்ட 13 புள்ளி விற்பனை முறையை (Points of Sales) கொள்வனவு செய்திருந்தது. எவ்வாறாயினும், இயந்திரங்களை செயற்படுத்துவதற்கான முறையான மென்பொருள் முறைமை காணப்படாததன் காரணமாக இப்பொருட்கள் உரிய நோக்கங்களிற்காக 04 ஆண்டுகளாக பயன்படுத்தப்படாதிருந்தது. | முறைமை செயற்படுத்து வதற்கான மென்பொருள் முறைமையை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தவறியக்கத்தின் பின்னர், பரீட்சிப்புக் காலப்பகுதியின் கீழ் முறைமை செயற்படுத்தப்படுகின்றது |

## 4.2 கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்ட வீடமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் (2015-2019) பிரகாரம், மீளாய்வாண்டின் போது ரூபா 3,225 மில்லியன் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் வீடற்ற குடும்பங்களுக்காக 6,600 வீடுகளை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், ஆண்டின் போது குறித்தொதுக்கிய மானிய அடிப்படையின் கீழ் 50 பயனாளிகளுக்கு ரூபா 10,600,000 வீடமைப்பு உதவி வழங்கியமை மற்றும் 300 கழிவறைகளை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 7,500,000 நிதி உதவி வழங்கியமை தவிர வேறு எவ்வித வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. | தமது சொந்த நிதியை உருவாக்குவதன் மூலம் வீடமைப்பு அபிவிருத்தி திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிதிகளின் பற்றாக்குறை காரணமாக முன்மொழியப்பட்ட வீட்டுத் திட்டங்களை அமுல்படுத்த முடியாது காணப்பட்டது. |

## 5. செயற்பாட்டு மீளாய்வு

### 5.1 செயலாற்றல் மீளாய்வு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், கிழக்கு மாகாண சபையின் அதிகார எல்லையின் கீழ் வருகின்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது 38 வினைத்திறமை காண் (ஈபீ) பரீட்சைகளை ஆணைக்குழு நடாத்த வேண்டும். எவ்வாறாயினும், 11 ஈபீ பரீட்சைகள் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், இரண்டு ஈபீ பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் 2018 ஏப்ரல் 24 இல் பெறப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது எவ்வித ஈபீ பரீட்சைகளும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய நேரத்தில் வினைத்திறமை காண் பரீட்சைகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சில வகை தொழில்நுட்ப சேவைகளுக்கான வளங்களின் பற்றாக்குறை காரணமாக, வினைத்திறமை காண் பரீட்சை 2019 இற்கு ஒத்திப்போடப் பட்டிருந்ததுடன் 2019 ஆகஸ்ட் இற்கு முன்னர் மேற்குறித்த வினைத்திறமை காண் பரீட்சையை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | கிழக்கு மாகாண ஆளுனரின் செயலாளரினால் வழங்கப்பட்ட 2014 யூன் 20 ஆந் திகதிய ஜீ/ஈபீசீ/பி/14/ஆர்/எச் ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், மாகாண வீடமைப்பு அதிகாரசபையானது திரண்ட நிதிகளில் தங்கியிராது அதன் சொந்த நிதிகளை உருவாக்க வேண்டுமென்ற நிபந்தனைக்கு உட்பட்டு சம்பளங்கள் மற்றும் ஏனைய செலவினங்களுக்காக 2014 ஆம் ஆண்டின் போது நிதிகள் கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மேலும் தாமதமின்றி அதன் சொந்த நிதியை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பற்றாக்குறையான நிரந்தர உத்தியோகத்தர்கள் மற்றும் வருமானத்தை உருவாக்கும் செயற்பாடுகளில் முதலீடு செய்வதற்கு ஒதுக்கீட்டின் பற்றாக்குறை காரணமாக, இந்த சூழ்நிலையில் எவ்வித வியாபார செயற்பாடுகளினையும் ஆரம்பிப்பது மிகவும் கடினமாகக் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், அதிகாரசபை அதன் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான |

| | | |
|---|---|---|
| எவ்வாறாயினும், அதிகாரசபையின் ஸ்தாபிப்பிலிருந்து 04 வருடங்கள் கடந்திருந்த பின்னர்கூட செலவினத்தை எதிர்கொள்வதற்கு அதன் சொந்த நிதிகளை உருவாக்கும்பொருட்டு எந்தவித வியாபார செயற்பாடுகளையும் ஆரம்பிப்பதற்கு அதிகாரசபை தவறியிருந்தது. | | நிதிகளை அதிகரிப்பதனூடாக இலாப அடிப்படையில் காணப்படும் செயற்பாடுகளினை ஆரம்பிக்கும் பொருட்டு பல்வேறுபட்ட நிதியளிக்கும் முகவர்கள் மற்றும் மத்திய அமைச்சுக்களுக்கு அதிகார சபை செயற்திட்ட முன்மொழிவுகளை தயாரித்து சமர்ப்பித்திருந்தது. ஆனால் நிதியளிக்கும் பங்காளிகளின் பதில் கிடைக்காமை காரணமாக அனைத்து இந்த முயற்சிகளும் தோல்வியடையப் போகின்றன. விரைவில் திருகோணமலை நகர சபையில் காணப்படுகின்ற பயன்படுத்தப்படாத தொடர்புடைய இயந்திரங்களைப் பயன்படுத்தி திருகோணமலையில் மண் பரிசோதனைசெய்யும் அலகொன்றை ஸ்தாபிப்பதற்கு அதிகாரசபை தற்போது திட்டமிடுகின்றது. |

## 5.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 06 வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகளில் 03 வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் 09 வருடங்களுக்கும் அதிகமாக செயற்படுத்தப்படவில்லை. எவ்வாறாயினும், அந்த 03 வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகளை | வர்த்தகமல்லாத முற்பணக் கணக்கு நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | செயற்படுத்தப்படாத வர்த்தக நடவடிக்கைகளினை முடிவுறுத்துவதற்கு பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| | முடிவுறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கிழக்கு மாகாணத்தில் சிறந்த நடமாடும் விரிவாக்கல் சேவைகளை வழங்கும் நோக்கத்திற்காக பிஎஸ்டிஜி இன் கீழ் விவசாயத் திணைக்களத்தினால் ரூபா 10,500,000 கிரயமொன்றில் நடமாடும் விரிவாக்கல் சேவைகள் நிலையம் (Mobile extension Services Center) (மண் பரிசோதனை ஆய்வுகூடம்) நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கரடியனாறில் அமைந்துள்ள சேவை பயிற்சி தொடர்பான கட்டிடத்தின் காணப்படுகையினைக்கூட கருத்திற் கொண்டிராததுடன் இந்தக் கட்டிடத்தின் தேவைப்பாட்டினை இனங்காண்பதற்கு திணைக்களத்தினால் சாத்தியவளக் கற்கையொன்று நடாத்தப்பட்டிருக்க வில்லை. | குறித்துரைக்கப் பட்ட நோக்கங் களுக்காக இந்த நிலையத்தைப் பயன்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதனை நோக்கியதாக முன்னேற்றஞ் செய்யப்பட்ட விவசாய நடைமுறைகளினை பரப்புவதற்காக அவர்களின் இயலளவினை கட்டியெழுப்பும் பொருட்டு கோட்பாடு மற்றும் செயன்முறைப் பயிற்சியினூடாக வெளிக்கள மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகளின் கொள்திறன் மற்றும் திறன்களினை வலுப்படுத்துவது கரடியனாறு சேவை பயிற்சி நிலையத்தின் பிரதான தொழிற்பாடாகக் காணப்படுகின்றது. மண் பரிசோதனை செயற்பாடு சேவை பயிற்சி நிலையத்தின் தொழிற்பாடுகளின் பகுதியாகக் காணப்படவில்லை. மண் பரிசோதனை செயற்பாடுகளுக்கு கட்டிடங்கள், ஆய்வுகூடங்கள் மற்றும் விசேட கண்டறியும் உபகரணங்கள் அத்துடன் சேவை பயிற்சி நிலையத்தின் தொழிற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுக் காணப்படாத பயிற்சியளிக்கப்பட்ட மனித வளங்கள்கூட தேவைப்படுகின்றது. அவ்வாறான சூழ்நிலையில், மாகாண குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தில் விவசாயத் துறைக்காக வருடாந்த அமுல்படுத்தல் திட்டத்தில் செயற்திட்ட முன்மொழிவுகளினை முன்வைப்பதனூடாக கிழக்கு மாகாணத்திலுள்ள பயிர்ச் செய்கை விவசாயிகளின் நலன்களுக்காக திருகோணமலையில் மண் பரிசோதனை வசதிகளினை ஸ்தாபிப்பதற்கு |

| | | |
|---|---|---|
| | | தீர்மானிக்கப்பட்டது. கட்டிடத்தின் நிர்மாணம் பூர்த்தியாக்கப்பட்ட பின்னர், விரும்பிய அளவில் மண் பரிசோதனை வசதிகளினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 5.3 வெளிப்படையான முறைகேடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கிழக்கு மாகாணத்திலுள்ள 21 முன்பள்ளிப் பாடசாலைகளுக்கு விநியோகத்திற்காக 2017 ஆம் ஆண்டில் குறித்தொகுதுக்கிய மானிய அடிப்படையின் (சீபீஜி) கீழ் ரூபா 608,000 இற்கு தளபாடம் மற்றும் விளையாட்டு வகைகள் போன்ற பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் 2019 மார்ச் 31 வரையிலும் தொடர்புடைய முன்பள்ளிப் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், பொருட்களினைப் பெற்றுக்கொள்ளாது முன்பள்ளி கல்விப் பணியகத்தினால் விநியோகஸ்தர்களுக்கு 2017 ஆம் ஆண்டில் மேற்குறித்த பொருட்களுக்கான செலுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் விளைவாக அரச நிதிகள் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | பொருட்களினைப் பெற்ற பின்னர் செலுத்துகைகளினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் முறைகேடுகளினை நிறுத்துவதற்கு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை அறிமுகப் படுத்தப்படல் வேண்டும். | மாகாண சபை உறுப்பினர்களின் நிதியுடனான கொள்வனவு செயற்பாடுகள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு மற்றும் அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கு கல்வி அமைச்சின் செயலாளர் குழுவொன்றை தாபித்துள்ளார். விசாரணைக் குழு அறிக்கையின் முன்மொழிவுகள் மற்றும் பரிந்துரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 5.4 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள பாடசாலையொன்றில் 66 மாணவர்களின் பயன்பாட்டிற்காக தொழில்நுட்பவியல் பீடக் கட்டிடமொன்றின் நிர்மாணத்திற்காக ரூபா 23.6 மில்லியன் கிரயத்தில் ஒப்பந்தமொன்றை மாகாண கல்வி அமைச்சு அளித்திருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் 2019 ஏப்ரல் 30 வரையிலும் நிர்மாண வேலையைப் பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தார். அதன் விளைவொன்றாக, தொழில்நுட்பவியல் பீட மாணவர்களுக்கான 66 கட்டாய செயன்முறைப் பயிற்சிகளில், 10 செயன்முறை கற்கைகளினை மாத்திரம் பூர்த்தி செய்திருந்தனர். மேலும், உபகரணங்கள் மாணவர்களினால் பயன்படுத்தப்பட்டிராது பாடசாலையில் தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றன. | ஒப்பந்தத்தை பூர்த்தி செய்ய மற்றும் மேலும் தாமதமின்றி உபகரணத்தைப் பயன்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஒப்பந்தக்காரர்க்கு பல செயற்பாடுகள் மற்றும் கண்காணிப்பு வழங்கப்பட்ட போதிலும், இந்தக் கட்டிடத்தின் வேலைகளை உரிய நேரத்தில் பூர்த்தி செய்ய முடியாது காணப்பட்டது. ஆகையினால், இந்த வேலை நிறுத்தப்பட்டிருந்ததுடன், வேலையின் பூர்த்திக்காக மீள் விலைமனு அழைக்கப்பட்டது. அதேவேளை, ஒப்பந்தக்காரர்களின் கறுப்பு பட்டியலில் முன்னைய ஒப்பந்தக்காரர்களின் பெயரை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | கால்வாயில் தண்ணீரை தடுப்பதன் சுற்றாடல் தாக்கங்களினை கருத்திற் கொள்ளாமலும் நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை என்பவற்றிடமிருந்து முன் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமலும் 459 ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு இடவசதியளிப்பதற்காக | நேயமான சுற்றுப்புறச் சூழல் அமைவிட மொன்றில் ஆரம்ப பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அருகாமையிலுள்ள வெற்றிடமாகவுள்ள காணியொன்றில் | காத்தான்குடிப் பிராந்திய அமைச்சரொருவரிடமிருந்து இந்த நிதி பெறப்பட்டது என, மட்டக்களப்பு மத்திய வலயக் கல்விப் பணிப்பாளர் அவரின் அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தார். அதேவேளை நாங்கள் சுற்றுச்சூழல் அம்சங்கள் மற்றும் மாணவர்களின் சுகாதார நிலைமையைக் |

| | | |
|---|---|---|
| மட்டக்களப்பு மத்திய வலயத்தின் காத்தான்குடியிலுள்ள பாடசாலையொன்றில் கால்வாய்க்கு குறுக்காக ரூபா 11,145,438 கிரயத்தில் இரண்டு மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, கால்வாயில் நீரோட்டம் தடைப்பட்டு தேங்கியிருந்ததுடன் இது நுளம்புகளிற்கான இனப்பெருக்க இடமொன்றாக மாறியிருந்தது. | இந்தப் பாடசாலையின் பகுதியொன்றை இடமாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | கருத்திற்கொண்டு, இந்த வேலையை உடனடியாக நிறுத்துவதற்கு நாங்கள் மட்டக்களப்பு மத்தி, இசெட்டீஈ (ZDE) இற்கு பணிப்புரை வழங்கியுள்ளோம். |

## 5.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கிழக்கு மாகாணத்தில் காணப்படும் தெரிவுசெய்யப்பட்ட ஐந்து ஆதார வைத்தியசாலைகளுக்கான டிஜிட்டல் சுகாதார செயற்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் ரூபா 12.32 மில்லியன் மொத்த தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 12.32 மில்லியன் பெறுமதியுடைய மடிக் கணனிகள், அச்சுப் பொறிகள், HD கமராக்கள், பட்டை குறிமுறை வாசிப்பான் மற்றும் சேவையகம் (Barcode Readers and Services) போன்ற உபகரணங்கள் 2018 நவம்பர் 30 வரையிலும் குறித்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய நேரத்தில் சொத்துக்களினைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வைத்திய உபகரணங்களினைப் பயன்படுத்துவதற்காக ஐந்து ஆதார வைத்தியசாலை களினையும் அறிவுறுத்துவதற்கும் மத்திய சுகாதார அமைச்சிடமிருந்து தொழில்நுட்ப அறிவினைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. |

## 5.6 பெறுகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிந்தவூர் மற்றும் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைகளில் நாள்பட்ட சிறுநீரக பாதிப்பிற்குள்ளான நோயாளிகளின் (Chronic Kidney Disease - CKD) பற்றாக்குறை காரணமாக எவ்வித இரத்த சுத்திகரிப்பு பிரிவுகளும் (Dialysis Units) காணப்படவில்லை. எவ்வாறாயினும், மாகாண சுகாதார திணைக்களம் அந்த வைத்தியசாலைகளுக்கான தேவைகளினை கருத்திற் கொள்ளாமல் ரூபா 18,555,000 கிரயத்தில் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சைக்கான (dialysis treatment) உபகரணம் மற்றும் ரூபா 6,147,426 தொகையான வைத்திய மருந்துகளினையும் கொள்வனவு செய்திருந்தது. இதன் விளைவாக, அவ் உபகரணம் 2017 மார்ச் 22 தொடக்கம் இன்று வரை விளைவற்றிருந்தது. | இரத்த சுத்திகரிப்பு பிரிவை பயன்படுத்துவதற்கு அல்லது அவற்றை தேவையுடைய வைத்தியசாலைகளுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கிண்ணியா, மூதூர், வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைகளில் காணப்படும் வைத்திய நிபுணர்களின் பற்றாக்குறை காரணமாக, துரதிஸ்டவசமாக தொழிற்படவில்லை. |